NUS
National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 9 May 2017

# ஆசியான் வட்டாரச் சமூகத் தொழில் முனைப்புத் திட்டங்களுக்குப் புதிய விருது

சிங்கப்பூரில் மட்டுமன்றி, ஆசியான் வட்டாரத்திலும் வசதி வாய்ப்பற்ற மக்களின் வாழ்க்கையில் நல்லதொரு திருப்பத்தை ஏற்படுத்திய சமூக அமைப்புகளுக்கும் தனிமனிதர்களுக்கும் கொடையாளர்களுக்கும் அங்கீகாரமளிக்க புதிய சமூகத் தொழில்முனைப்பு விருது நேற்று தொடங்கி வைக்கப்பட்டது.

'அறப்பணித் தந்தை' என்று அறியப்படும் காலஞ்சென்ற டாக்டர் ஈ பெங் லியாங்கின் அறப்பணித் திட்டங்களைத் தூண்டுகோலாகக் கொண்டு, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் சமூகப் பணித்துறை ஆசியான் சமூக நல்விளைவு விருதை அறிமுகப்படுத்தியது.

சமூக உண்டியல், சிங்கப்பூர் சமூகச் சேவை மன்றம் போன்ற பல்வேறு அறப்பணி அமைப்புகளைத் தோற்றுவித்த தொழில் அதிபர் டாக்டர் ஈ.

"உண்மையான சமூகத் தொண்டாளரே நாங்கள் பரப்ப விரும்பும் செய்திக்கான சிறந்த எடுத்துக்காட்டு," என்றார் விருதின் தலைவர் திரு ஸ்டான்லி டான்.

"இந்தப் பாதையைக் கடந்து வந்த ஒருவரை எடுத்துக் காட்டுவதன்மூலம், தற்போது (சமூகப் பணி) செய்து வருவோருக்கு அதிக தூண்டுதலும் ஊக்கமும் கிடைக்கும்," என்றார் அவர்.

ஆசியான் வட்டாரத்தின் ஓரங்கட்டப்பட்ட பிரிவினருக்காகச் செயல்பட்டு, குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் இந்தத் துறையில் நல்விளைவுகளை ஏற்படுத்திய அனைத்து வயதினரும் நாட்டவர்களும் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

முதல் ஆண்டில் சுமார் 120 விண்ணப்பங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசியக் கொடையாளர் வட்டம் (ஏபிசி), பொதுமக்களுக்கான அஷோகா புத்தாக்கத் திறனாளர்கள், தேசிய பல்கலைக்கழகத்தின் சமூகப் பணித்துறை ஆகியவை ஏற்பாடு செய்யும் இந்த விருதுக்கு ஈ பெங் லியாங் நினைவு நிதி ஆதரவளிக்கிறது.

அடையப்படும் சமூக நல்விளைவின் அளவு, தொழில் முனைப்புத் தரம், புத்தாக்கத் தரம், நீடித்த நிலைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இறுதிச் சுற்றுக்கு ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

நீதிபதிக் குழுவில் கொடையாளர்களும் ஆசியான் நாடுகளைச் சேர்ந்த மற்ற தனிமனிதர்களும் இருப்பர்.

தலைசிறந்த மூவர் தங்களது சமூகத் தொழில்முனைப்புப் பணியை மேம்படுத்த உதவியாகத் தலா $50,000 பெறுவார்கள்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.